முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.08.2022, வெள்ளிக்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
தருமபலம் கொண்ட தேசிகனே
அவனிகாக்க அவதாரம் புரிந்த
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது யாளி திங்கள்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 10 நாள், 26.08.2022 வெள்ளிக்கிழமை)
தெரியவே தசதிகதி புகர் வாரம்
தேசிகனுக்கு பேயாழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டும் ஞானி
ஞானமே மக்களை தேற்றி
ஞானவான்கள் ஆக்குமென்பேன்
4. என்கவே மனமாயை எனும்
இடரான தீவினை பேய்களை
துன்பம் தரா விரட்டி காக்க
தேசிகன் ஞானவழித் தொடர வேண்டும்
5. வேண்டியே சன்மார்க்கம் எனும்
வேலவன் மார்க்கம் தன்னை
தொண்டொடு வேதமாக ஏற்று
தொடர்ந்து மக்கள் பின்பற்றிவர
6. வருகவே மனத்தூய்மை கூடி
வக்கிர கொடூர மாசுகள் விலகி
தரும குணமும் தெளிவு திடமும்
தரணியை காக்கும் வரமும் கூடி
7. கூடியே மக்கள் அனைவரும்
குருவரங்கன் அருட்தயவால்
தேடியே சகல வரங்களும் கிட்டி
திருவருள்பட நிலைத்து நிற்பர்
8. நிற்கவே கலிகால கஷ்டங்களை
நிற்கவிடா உலகை விட்டு விரட்டி
உற்றதொரு ஞானமோடு நீதிநெறி
உலகை காக்கும் வண்ணமாக
9. ஆகவே ஞான வான்கள் தலைமை
அகிலம் அடையும் வண்ணம்
மிகைபட சக்தி பெருக்கம் தந்து
மண்ணுலகே ஞானிகள் ஆசிபலம்

10. ஆசிபலம் ஆளுமையாக மாறி
அகிலமே ஞான ஆட்சி காண்கும்
வாசிவென்ற மக்கள் படைகளாக
வையகம் முழுக்க நிரம்பி இனிதே

11. இனிதே ஞானலோக மாற்றம்
இயம்பிடுவேன் அரங்கமகான் வடிவாக
கனிவேலவன் தன்னால் நிகழும்
கண்டுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–